விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 22 ஞாயிற்றுக்கிழமை (08.10.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 284

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# மோதல்கள் தொடருமானால் சமாதானப் பேச்சு சீர்குலையும்

## கண்காணிப்புக்குழு எச்சரிக்கை

(கொழும்பு)

இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையிலான மோதல்கள் தொடருமானால் சமாதானப் பேச்சு வார்த்தைகள் சீர்குலையும் என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு எச்சரித்துள்ளது.

எனினும் இரு தரப்பினரும் அமைதிக்கான முயற்சிகளை கைவிடமாட்டார்கள் என நம்புவதாகவும் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## பனிச்சங்கேணித் தாக்குதலில் 11 போராளிகள் வீரச்சாவு

### எழிலன் தெரிவிப்பு

(திருகோணமலை)

வாகரைப் பனிச்சங்கேணிப் பிரதேச ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்ட சமரில் 11 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர் என்று திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் சி.எழிலன் கூறியுள்ளதாவது; வாகரை வலிந்த தாக்குதலில் 400 இராணுவத்தினரும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக்குழுவினர் 80 பேரும் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த முறியடிப்புச் சமர் சிறப்புத்தளபதி கேணல் சொர்ணம் வழிகாட்டுதலின் கீழ் நடத்தப்பட்டது.

எம்மால் கைதுசெய்யப்பட்டுள்ள இராணுவத்தைச் சேர்ந்த கெமுனு வோட்ச் 6 ஆம் படையணியின் கே.எம்.எஸ்.ரட்ணநாயக்க (வயது 31) நுவரேலியா (04 ஆம் பக்கம் பார்க்க)

## பனிச்சங்கேணித் தாக்குதலில் 2 இராணுவத்தினரே உயிரிழப்பு

### இராணுவப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

பனிச்சங்கேணி உள்ளிட்ட பகுதிகளில் இடம் பெற்ற மோதல்களில் இராணுவத்தரப்பில் இருவரே உயிரிழந்ததாக இராணுவப் பேச்சாளர் பிரசாத்சமரசிங்க தெரிவித்துள்ளார்.

8 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. மேலும் 15 பேருக்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளது என இராணுவப் பேச்சாளர் கூறினார்.

அதேநேரம் முன்னணிக் காவலரணுக்கு வெளியே அவதானிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த 12 பேரைக் காணவில்லை எனவும் கூறினார்.

இராணுவத்தினரின் உடல்கள் விடுதலைப் புலிகளிடம் இருக்குமானால் அவற்றை தங்களிடம் ஒப்படைக்குமாறு கண்காணிப்புகுழுவினரையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரையும் தாம் கேட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கருணா குழுவினரே தாக்குதல் நடத்தியதாகக்கூறுகின்றனரே என அவரிடம் கேட்டபோது ஆயுதக்குழுவினர் கூறுவது குறித்து தன்னால் பதிலேதும் கூறமுடியாது.

அவர்களுக்கும் எங்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. எங்கள் முன்னணிக் காவலரண் மீது தாக்குதல் நடைபெற்றது. அதற்கு நாங்கள் பதில் தாக்குதல் நடத்தினோம் என்றார் இராணுவப் பேச்சாளர். (ச)

## சமாதானப் பேச்சிற்கு முன் அனைத்துக்கட்சி மாநாடு

(கொழும்பு)

அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் சர்வகட்சி மாநாடு ஒன்றை நடாத்த அரசு எண்ணியுள்ளதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இம் மாநாடு இவ் வாரம் அல்லது அடுத்த வாரம் நடத்தப்படும் எனவும் அவர் கூறினார். இம்முறை விடுதலைப்புலிகளுடனான பேச்சின் போது இறுதித்தீர்வு எட்டுவது குறித்துப் பேசப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் விடுதலைப்புலி (04 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிக்க பௌயர் புதுடில்லியில் இருந்து வருகிறார்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை குறித்த அட்டவணைகளைத் தயாரிப்பதற்காக விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் இந்தியாவில் இருந்து மீண்டும் இலங்கை வரவுள்ளார்.

இலங்கை சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து விளக்குவதற்காக புதுடில்லி சென்றுள்ள பௌயர் அங்கிருந்து இலங்கைக்கு வருகிறார்.

பேச்சுவார்த்தைக்கான இடம் குறித்து இரு தரப்பினரும் மாறுபட்டுள்ளதால் அதற்கான சமர முயற்சிகளிலும் அவர் ஈடுபடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்காக பௌயர் நாளை கிளிநொச்சிக்குச் செல்லக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை நோர்வேயின் சமாதானத்தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு வருகை தந்ததும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பனிச்சங்கேணி மீதான தாக்குதல் கருணா குழுவே மேற்கொண்டது!

### அதன் பேச்சாளர் பி.பி.ஸிக்கு தகவல்

(லண்டன்)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான பனிச்சங்கேணி நோக்கிய படை நகர்வை தாமே தனியாக மேற்கொண்டதாக கருணா குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து கருணா குழுவின் பேச்சாளர் தூயவன் லண்டன் பி.பி.ஸி. தமிழோசைக்கு தகவல் தெரிவித்துள்ளார்.

தமது தாக்குதலின் பின்னர் இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதல் நடந்த அதன்பின்னரே இராணுவத்தினர் தாக்கியிருக்கலாமென அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினருடன் தாம் இணைந்து மேற்கொண்டதாக தெரிவிக்கப்படும் தகவல்களையும் அவர் மறுத்துள்ளார்.

இம் மோதல்களின்போது தாம் விடுதலைப் புலிகளின் உடல்கள் சிலவற்றை மீட்டு அவற்றை வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளதாகவும் கூறியுள்ளார். தங்களுடைய தரப்பில் 8 பேர் உயிரிழந்ததாகத் தெரிவித்துள்ளார். (எ)

## மகாஜனாக் கல்லூரி முன்னாள் அதிபர் அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 6.55 மணியளவில் தெல்லிப்பழை 8ஆம் கட்டைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இதன்போது கதிர்காமத்தம்பி நாகராசா (வயது 65) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

அவரது வீட்டிற்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர், முன்னாள் அதிபரை வெளியே அழைத்து சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

சூட்டில் காயமடைந்த அவர் உடனடியாக அருகிலுள்ள தெல்லிப்பழை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டபோது சிகிச்சை பலனளிக்காமல் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி சரோஜினி இளங்கோவன் மரண விசாரணையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கு மாறு உத்தரவிட்டார்.

அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் யாழ்.சமூக சேவைகள் திட்டமிடல் மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும் பணியாற்றிய அவர் இந்து கலாசார அமைச்சிலும் கடமையாற்றியதாக தெரிவிக்கப் பட்டது. (எ-5)

# பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண அனைத்து முயற்சிகளும் எடுப்போம்

## சமாதானத்துக்கான குழு உத்தரவாதம்

(யாழ்ப்பாணம்)

மாணவர்கள் இயல்பாக, சுமுகமான சூழ் நிலையில் கல்வி கற்பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருவதாக நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ்.ஆயர் இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் சமாதானத்திற் கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு உறுதியளித்துள்ளது.

முன்னாள் துணைவேந்தர் கலாநிதி பொன். பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடை பெற்ற இக் கலந்துரையாடலில் யாழ்.ஆயர் அதிவண. டாக்டர் தோமஸ் சவுந்தரநாயகம், குழுவின் செயலாளர் எஸ்.பரமநாதன், உப செயலாளர் வணபிதா. ஜே.பி.ஈ.செல்வராஜா ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மைய இணைப்பாளர் வணபிதா.ரூபன் மரியாம் பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்குழு ஆரம்பமான 10 வருட கால மாக சிவில் சமூக செயற்பாடுகளை மேற் கொண்டுவருகின்றது. மக்கள் பிரச்சினைக ளை முன்னுரிமைஅடிப்படையில் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், பிறநாட்டுத் தூதுவர்கள், அரச அதிபர் மற்றும் சம்பந்தப் பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாக தலைவர் பாலசுந்தரம்பிள்ளை உறுதியளித்தார்.

குடாநாட்டில் கல்விச் செயற்பாடுகள் முடக்கப்பட்டமை தொடர்பாக மாணவர்களு டன் நடத்திய சந்திப்புக்களின்போது அவர்க ளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஒரேயடியாக, உடனடியாக நிறைவேற்ற முடி யாது விட்டாலும் படிப்படியாக அவற்றை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுத்து வருவதாகத் தெரிவித்த கலாநிதி பாலசுந்தரம் பிள்ளை, 1970களில் கல்வியில் உச்சநிலை யில் இருந்த குடாநாடு இன்று பாரிய வீழ்ச் சியைக் கண்டிருப்பது அண்மையில் வெளி யான க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளி லிருந்து அறியக் கூடியதாகவிருப்பதாகவும் இழந்த கல்வியை பெற முடியாததெனினும் இனியும் இழக்கும் நிலை தொடராமல் நாளைய தினத்திலிருந்து கல்விச் செயற்பா டுகளை ஆரம்பிக்க மாணவர் சமூகம் எடுத் துள்ள முடிபை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள் வதாகவும் தெரிவித்தார்.

பாடசாலைகள் ஆரம்பமாவதைத் தொடர் ந்து தொழில்நுட்ப நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், தேசியக் கல்வியியற்கல்லூரி, ஆசிரியர் கலாசாலை மற்றும் கல்விசார் ஆகியவற்றின் கல்வி நடவடிக்கைகள் தொடர முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் கூறினார்.

ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட் சை ஒத்திவைப்பு, மாணவர்கள் எதிர்கொள் ளும் போக்குவரத்துப் பிரச்சினை, இடம்பெய ர்ந்த மாணவர்களின் நிலை, உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் உள்ள பாடசாலைக ளுக்கு மாணவர்கள்செல்ல முடியாத நிலை என்பன பற்றியும் ஊடகவியலாளர்கள் கேட்ட கேள் விகளுக்கு பதிலளித்த தலைவர்,

புலமைப் பரிசில் பரீட்சை ஒத்திவைக்கப் பட்டிருக்கின்றதேயன்றி இரத்துச் செய்யப்பட வில்லை என்றும் இதனை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் மா ணவர்களது போக்குவரத்துப் பிரச்சினைக ளை தீர்க்க உடன்நடவடிக்கை எடுப்பதாக யாழ். மாவட்ட அரச அதிபர் க.கணேஷ் உறுதியளி த்துள்ளதாகவும் ஏனைய பிரச்சினைகளுக் கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்து ரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் மேலும் உறுதியளித்தார்.

இதேவேளை ஊடரங்குச் சட்டம் பிறப்பிக் கப்பட்டதைத் தொடர்ந்து ஏ-9பாதை மூடப்பட் டதால் ஏற்பட்ட உணவுப்பிரச்சினை, போக் குவரத்துப் பிரச்சினை, வான்,பல்குழல் பீரங் கித் தாக்குதல்கள், மின்தடை முதலிய முக் கிய பல பிரச்சினைகளைப் பற்றி சம்பந்தப் பட்டவர்களுடன் கலந்து பேசியதன் பலனாக ஒருசில பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட் டுள்ளதாகவும் ஏனையவற்றுக்கும் தீர்வு காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஆயர் கூறினார்.

மக்கள் பிரச்சினைகள் குறித்து நேரடியா கக் கலந்துரையாட படைத் தலைமைத் தளப திக்கு கடிதம் எழுதியுள்ளதாகவும் அது பற் றிய முடிபு கிடைத்ததும் அவருடன் பேசி பல பிரச்சினைகளுக்கு முடிபு காண முடியும் என் றும் யாழ்.ஆயர் தெரிவித்தார். (து-133)

## கப்பல் விபத்தில் பலர் உயிரிழப்பு

### யப்பானில் சம்பவம்

(கொழும்பு)

யப்பானில் டோக்கியோ நகருக்கு அரு கில் எண்ணெய்க் கப்பல் ஒன்று விபத்துக்கு ள்ளானது.இதில் ஒரு இலங்கையரும் 25 இந்தியர்களும் இருந்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

அவுஸ்திரேலியாவிலிருந்து சென்ற கப் பலே விபத்துக்குள்ளானது. 98 ஆயிரத்து 587 தொன் எடையுள்ள எண்ணெய்க் கப் பல் சென்று கொண்டிருந்தபோது திடீரென தீப்பிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

சீரற்ற காலநிலை காரணமாகக் கப்பல் சேதத்திற்குள்ளானதாகக் கூறப்பட்டது. 17 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதோடு ஒரு இந்தியர் உயிரிழந்தார். 9 பேரைக் காண வில் லை என்றும் கூறப்பட்டது. (ச)

## நேற்று இரண்டாவது நாளாக இறப்புக்கள் பதியப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணை குழுவில் நேற்று இரண்டாவது நாளாகவும் அண்மையில் இடம்பெற்ற படுகொலைகள் சம்பந்தமான பதிவுகளை மேற்கொள்வத ற்கு வலிகாமம் பகுதியினைச் சேர்ந்தவர்கள் வந்திருந்தனர்.

நேற்று சுமார் 40 ற்கும் மேற்பட்டவர்கள் தமது உறவுகளின் இறப்புப் பற்றிய விபரங் களை பதிவு செய்தார்கள் எனத் தெரிவிக் கப்பட்டது.

பெற்றோர்கள், மனைவிமார்கள், சகோத ரர்கள் என பலர் இறப்புக்குறித்த விபரங்க ளைப் பதிவு செய்தனர்.

குறிப்பாக இந்த இழப்புக்கு உட்பட்ட குடு ம்ப அங்கத்தவர்கள் மிகவும் உள ரீதியாகப் பாதிக்கப்பட்டுக் காணப்படுகின்றமை குறிப் பிடத்தக்கதாகும்.

நேற்று வருகை தந்த பெற்றோர்களில் பலர், தாம் என்ன செய்வது என்னவென்று தெரியாத நிலையில் காணப்படுவதாகவும் தமது பிள்ளைகளுக்குக் கூட உரிய உண வை வழங்க முடியாத நிலையில் கணவனை இழந்து அந்தரிப்பதாகவும் தமக்கு வாழ்வ தற்கு வழி தெரியாமல் இருப்பதுடன் பிள் ளைகளின் பசியைப் போக்கக் கூடிய நிலை யிலும் தாம் இல்லாமையால் பிள்ளைகளு டன் தற்கொலை செய்வதை விட தமக்கு வேறு வழி தெரியவில்லை எனவும் புலம்பி யதாக மனித உரிமைகள் ஆணைக்குழு வட் டாரங்கள் தெரிவித்தன. (எ-1)

## மீன்பிடிப் படகு எரிந்து நாசம்

(கொழும்பு)

பேருவளை மீன்பிடித் துறைமுகத்தில் நங்கூரம் இடப்பட்டிருந்த மீன் பிடிப்படகு ஒன்று தீப்பற்றிக் கொண்டது. நேற்று அதி காலை 3மணியளவில் இந்த றோலர் படகு தீக்கிரையாகி முற்றாகச் சேதமாகியது. இந் தப் படகில் நித்திரை செய்து கொண்டிருந்த நபர் தப்பியுள்ளார். (ச)


## விடுமுறைகளில் கடைகள் திறப்பு


(யாழ்ப்பாணம்)

தீபாவளி தினத்தை முன்னிட்டு விடுமுறை தினங்களில் வர்த்தக நிலையங்களைத் திற க்குமாறு வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகை தினத் தை முன்னிட்டு சகல வர்த்தக ஸ்தாபனங் களும் கடந்த 6 ஆம் திகதி தொடக்கம் எதிர் வரும் 21ஆம் திகதி வரை உள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை தினங்களில் வர் த்தக நிலையங்களைத் திறந்து வியாபாரம் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விடுமுறை தினங்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்படல் வேண் டும்எனவும் 21 ஆம் திகதிக்குப் பின் சகல ஞாயிறு, போயா மற்றும் வர்த்தக தினங்க ளில் வர்த்தக ஸ்தாபனங்களை மூடி வர்த்தக ஊழியர்களுக்கு விடுமுறை வழங்கி சகல வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண் டும் எனவும் யாழ்.வணிகர் கழகம் கேட்டுள் ளது. (எ)





வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்த உற்சவம் 50 பேருக்கு மத்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

படங்கள்:-துன்னாலை நிருபர்

நியாயத்துக்காகவும் தர்மத்திற்காகவும் பொது ஜன அபிப்பிராயத்தை எதிர்த்து நிற்க தயாராக வேண்டும். -சாக்ரட்டீஸ்

வலம்புரி

# யுத்தம் நடக்கும்போது சமாதானம் சாத்தியமாகாது

இராணுவத்திற்கும் விடுதலைப்புலிக்கும் இடையேயான மோதல் சம்பவங்கள் ஆங்காங்கே இடம் பெற்று வருவது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆரோக்கியமானதல்ல.

யுத்தமும் சமாதானமும் ஏக காலத்தில் இடம் பெறக் கூடியதல்ல என்ற உண்மையை அரசு முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்த மண்ணில் சமாதானம் நிலவ வேண்டும் என அரசு உளப்பூர்வமாக எண்ணுமேயாயின் முதலில் தாக்குதல் சம்பவங்களை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

சமாதானம் என்பது உதவி வழங்கும் நாடுகளை சமாளிப்பதற்கானதெனில் தாக்குதல்கள் இடம் பெறவே செய்யும்.

விடுதலைப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு இருபது வருடங்கள் கடந்து விட்டபோதிலும் அதனை ஒடுக்குவதில் அரசு எடுத்தமுயற்சிகள் எதுவுமே வெற்றி தரவில்லை.

விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதுஎன்ற பேரில் அப்பாவிப் பொதுமக்களின் உயிர்கள்பறிக்கப்பட்டனவேதவிர வேறு என்னதான் நடந்தது?

பேரினவாத சிந்தனையால் அழகான இலங்கைத்தீவு குட்டிச்சுவரானது. அதன் அபிவிருத்திப் பணிகள் பின் தள்ளப்பட்டன.

அண்டை நாடான இந்தியா தொழில் நுட்பத்தில் மருத்துவத்தில், பொருளாதாரத்தில் அதீத வேகமாக வளர்ச்சியடைந்திருக்கும்போது,

இலங்கை உள்நாட்டில் யுத்தம் நடத்துவதற்கே ஆயுதம் கொள்வனவு செய்வதில் அக்கறை காட்டுகிறது. இது ஏன்? எதற்கு? என்றகேள்வியை சிங்கள மக்கள் எழுப்ப வேண்டும்.

என்ன செய்வது! சிங்கள புத்திஜீவிகளும் மதம், மொழி என்ற மாய இருளுக்குள் சிக்குண்டு ஒளியை அறிய முடியாமல் தத்தளிக்கின்றனர்.

இலங்கை என்ற இந்த அழகாபுரி பல்லின மக்களுக்கும் பல் சமயங்களுக்கும் உரியது என்ற உண்மையை ஆட்சியாளர்களுக்கு எடுத்துக் கூறக் கூடியவர்கள் தென்னிலங்கையில் தோன்றவில்லை.

அவ்வாறு ஒரு சிலர் தோன்றியிருந்தாலும் அவர்கள் பேரினவாதத்திற்குப் பலியாகிப் போனார்கள். சமாதானத்தை விரும்புகின்ற சிங்கள மக்களுக்கு அவர்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய தலைவர்கள் ஆட்சிப் பீடங்களில் இன்மையால் அவர்களும் பொய்ப்பிரசாரங்களை நம்பி ஏமாந்து போனார்கள்.இந்நிலைமையை மாற்றி அமைக்கக் கூடியவர்கள் படையினர் என்பதே உண்மை.

யாழ்.குடாநாட்டில் மக்கள்படும் அவலங்களை நேரில் அறிந்தவர்கள் படையினர் என்பதால் அவர்கள் உண்மை நிலையை தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும்.

அதேநேரம் சமாதானம்என்ற அறிவிப்பும் சண்டையை அமுலாக்குவதுமான அரசின் நடவடிக்கையை நிறுத்த படையினர் முன்வர வேண்டும்.

போர் என்றால் போர்; சண்டை என்றால் சண்டை என்ற தெளிந்த முடிபே தற்போது தேவையானதாகும்.

சண்டைகள் செய்து கொண்டு சமாதானத்தை அடைய முடியாது என்பதே உண்மை என்பதால் உடனடியாக சண்டையை நிறுத்த சமாதானத்தை முன்நிறுத்தும் முயற்சிகளை அரசு முன்னெடுக்க வேண்டும். இதனை படையினர் உறுதி செய்ய வேண்டும்.

# தமிழ்க் கூட்டமைப்புடன் பேசாத அரசு விடுதலைப்புலிகளுடன் பேசப் போகிறதா?

## இரா.சம்பந்தன் கேள்வி

நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தைப் புறக்கணித்து பேச மறுத்த அரசாங்கம்தானா தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்போகிறது என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் ஊடகவியலாளர்களிடம் இரா.சம்பந்தன் கூறியதாவது,

வடக்குக் கிழக்குப் பகுதியிலிருந்து 15 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் தமிழ் நாட்டிற்கு அகதிகளாகத் தப்பிச் சென்றுள்ளனர். போர் நடவடிக்கைகளால் வடக்குக் கிழக்கில் பாரிய மனித அவலம் ஏற்பட்டுள்ளது.

மொத்தம் 2 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் முதல் நடைபெற்றுவரும் வன்முறைகளில் ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 4 ஆயிரம் பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு செல்லப்படுகின்ற உணவுப் பொருள்கள் போதுமானதாகவில்லை. அரசாங்கமானது 1990களின் நடுவில் உள்ள கணக்குகளை வைத்துக் கொண்டு உணவுப் பொருள்களை அனுப்புகிறது. இன்றைய நிலைமைக்கு அது போதுமானது அல்ல.

யாழ்.குடாநாட்டில் 6 லட்சம் மக்கள் உள்ளனர். 30 நாட்களுக்கான உணவுப் பொருள்கள் கொடுக்கப்பட்டதாகக் கூறினாலும் 15 முதல் 20 நாட்களுக்கு மட்டுமே அவை போதுமானது.

வெள்ளைவான் குழுவினரால் யாழ்.குடாநாட்டில் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்தக் குழுவினர் இராணுவத்தினரது சோதனைச் சாவடிகளை எதுவித தடையுமின்றி கடந்து செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மதகுருமார்கள், வர்த்தகர்கள், ஊடகவியலாளர்கள், சமூக அமைப்புக்களின் உறுப்பினர்கள் மற்றும் மனிதாபிமானப் பணியாளர்கள் அனைவரும் தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளனர். இதனால்தான் மக்கள் வெளியேறுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனேயே பேச விரும்பமில்லாத அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் எப்படிப் பேசப்போகின்றது? ஆகையால் இந்த அரசாங்கம் மீது எங்களுக்கு நம்பிக்கையில்லை. இவர்கள்தான் விடுதலைப் புலிகளை ஜனநாயகப் பாதைக்கு அழைக்கின்றனர் என்றார் இரா.சம்பந்தன். (எ-5)

# சு.க.-ஐ.தே.க.ஒப்பந்தத்துக்கு ஜே.வி.பிதான் முக்கிய காரணம்

## ஜாதிக ஹெலஉறுமய சாடல்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இடையேயான இணக்கத்திற்கு ஜே.வி.பிதான் பாதை அமைத்துக் கொடுத்தது என்று ஜாதிக ஹெலஉறுமய சாடியுள்ளது.

இது தொடர்பில் ஜாதிக ஹெலஉறுமய பொதுச் செயலாளர் ஓமல்பே சோபிததேரர் கூறியதாவது;

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்துவதன் மூலம் இந்த நாட்டில் எதிர்மறையான விளைவுகள் ஏற்படும்.

இத்தகைய நிலைமைக்கு ஜே.வி.பிதான் காரணம். இரு கட்சிகளிடையேயான பேச்சுவார்த்தைக்கு பாதை போட்டுக் கொடுத்தது ஜே.வி.பிதான். அரசாங்கத்துடனான ஆதரவை ஜே.வி.பி. விலக்கிக் கொண்டால் பயங்கரவாதத்திற்கு எதிரான போராட்டத்தின் ஒருமித்த் கருத்து பலவீனப்படுத்தப்பட்டுவிடும்.

பயங்கரவாதத்திற்கு எதிராக மகிந்த ராஜபக்ஷ பெற்றுவரும் வெற்றியை புறக்கணித்து விடுவதாகிவிடும் என்றார்.

இதேவேளை இரு கட்சிகளின் இணக்கம் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஹசன் அலி கூறியதாவது,

சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் உருவாக்கப்படுவது வரவேற்கத்தக்கது.

அதேநேரத்தில்இனப்பிரச்சினை தொடர்பில் சிறுபான்மைக் கட்சிகளினது ஆலோசனைகளையும் பெறவேண்டும். தேசிய செயற்திட்டம் உருவாக்கப்படும்போது சிறுபான்மையினருடன் ஆலோசிப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என்றார் ஹசன் அலி. (எ-1)

# எமது போசனைத் தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்வோம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் தற்போதைய சூழ்நிலை காரணமாக மக்கள் தமக்குத் தேவையான போசனைப் பெறுமானமுள்ள உணவு வகைகளை தாமே தேர்ந்தெடுப்பதற்கு சிரமப்படுகின்றனர்.

பால் மா வகைகள், விலங்குணவுகள், மீன், முட்டை போன்றவற்றை மக்களின் தேவைக்கேற்றவாறு பெற்றுக் கொள்ள முடியாத காரணத்தால் எல்லா வயதினரும் விற்றமின், புரதக் குறைப்பாடுகளை எதிர்நோக்க வேண்டிவரும்.

நாள் ஒன்றிற்கு 9 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 25 கிராம் புரதம், 400 மி.கி.விற்றமின் ஏ, 2.5 மி.கி. விற்றமின் டி, 119 மி.கி.விற்றமின் பி, 20 கி.விற்றமின் சி, 450 மி.கி. கல்சியம், 8-16 மி.கி.இரும்பு என்பவை தேவைப்படுகிறது.

வயது வந்தோருக்கு சராசரியாக 35 கிராம் புரதம், 750 மி.கி.விற்றமின் ஏ, 2.5 மி.கி.விற்றமின் டி, 225 மி.கி.விற்றமின் பி, 30 மி.கி.விற்றமின் சி, 450 மி.கி.கல்சியம், 8-15 மி.கி. இரும்பு என்பன தேவைப்படுகின்றன.

மேலும் நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மாருக்கும் சராசரியிலும் கூடுதலான விற்றமின்களும் கனியுப்புக்களும் தேவைப்படுகின்றன.

தற்போது கிடைக்கக் கூடிய பழங்களான பப்பாசி, வாழை, மா, நெல்லி, திராட்சை போன்றவற்றோடு கீரை வகை களையும் போதியவளவு சேர்க்கும்போது கல்சியம், பொசுபரசு, இரும்பு போன்ற கனியுப்புக்களும் விற்றமின்களும் உணவில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது.

இவற்றுடன் இங்குள்ள மரக்கறி வகைகளில் இருந்தும் பிரதான போசனைச் சத்துக்கள் கிடைக்கின்றன. மரவள்ளி, வற்றாளை போன்ற கிழங்கு வகைகளில் போதியளவு விற்றமின்களும் கனியுப்புக்களும் காணப்படுகின்றன.

புரத உணவுப் பற்றாக்குறையை ஈடுசெய்ய பயறு, கௌப்பி, உழுந்து, இராணி அவரை போன்ற அவரை இனங்களை மாமிச உணவுக்குப் பிரதியீடாக சேர்ப்பது அவசியமாகிறது.

எனவே தற்போதைய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வீட்டிலேயே சகல போசனைச் சத்துக்கள் நிறைந்த பயிர்களை பயிரிடுவதுடன் விவசாயிகளும் தேவைக்கேற்ப பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல் முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

எமது மக்கள் இறக்குமதி உணவு வகைகளில் உணவு தயாரித்து பழகியிருந்தபோதும் உள்ளூர் உற்பத்தியிலிருந்து சத்துள்ள உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து உண்ணப் பழகுவது அவசியமாகும்.

திருமதி கி.சிவதீபன், விவசாயக்கண்காணிப்பு உத்தியோகஸ்தர், பிரதி விவசாயப் பணிப்பாளர்(விரி)அலுவலகம், யாழ்ப்பாணம்.

# நளினியை விடுதலை செய்ய திருமாவளவன் கோரிக்கை

ராஜீவ் வழக்கில் ஆயுள் தண்டனை காலத்தை நிறைவு செய்திருக்கும் நளினியை தமிழ்நாடு முதல்வர் கருணாநிதி விடுதலை செய்ய வேண்டும் என்று விடுதலைச் சிறுத்தைகள்கட்சிப் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன் வேண்டுகோள் விடுத்தார்.

மதுரையில் தி.மு.க.தலைவர் கருணாநிதி தலைமையில் தி.மு.க.கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவநர் மருத்துவர் இராமதாஸ், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தா.பாண்டியன், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக்கழகத் தலைவர் ஜவாஹிருல்லா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய திருமாவளவன் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை விடுதலை செய்ததுபோல் ராஜீவ் வழக்கில் சிறையில் உள்ள நளினியையும் விடுதலை செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். (ச)

# வடமராட்சியில் சுற்றிவளைப்பு

வடமராட்சியில் பல இடங்களில் நேற்று சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. கரவெட்டி மேற்கு மற்றும் அல்வாய் வடக்குப் பகுதிகளிலேயே நேற்றுத் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

சுற்றிவளைப்பின்போது கரவெட்டி மேற்கில் வசிக்கும் இளைஞர்கள் கலட்டி வீதியிலுள்ள சேமக்காலைக்கு அருகிலுள்ள மைதானத்திற்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

அல்வாய் வடக்கு மக்கள் இன்பருட்டிக்கு அழைக்கப்பட்டு இராணுவத்தினரால் விசாரிக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# யுத்தம் பிரச்சினைக்கு தீர்வல்ல! உடனடியாக பேச்சை ஆரம்பியுங்கள்

## துறவற சபை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யுத்தம் பிரச்சினைக்குத் தீர்வல்ல; உடன் பேச்சுக்களை ஆரம்பியுங்கள் என வேண்டு கோள் விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தமிழ்–சிங்கள கத்தோலிக்க துறவற சபைகளின் தலைவர்கள் தமது வருடாந்த ஒன்றுகூடலில் மேற்படி வேண்டு கோளை விடுத்துள்ளனர்.

யாழ்.,மன்னார் பகுதிகளுக்குச் சென்று நிலைமைகளை நேரடியாக பார்வை இட்ட பின்னரே மேற்படி வேண்டுகோள் விடப்பட்டது.

6 பேர்கொண்ட குழு மன்னாருக்கும் 3 பேர் கொண்ட குழு யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் மேற்கொண்டு இராணுவத்தினர் – பொதுமக்கள்– அரச உயர் அதிகாரிகள் – விடு தலைப்புலிகள் ஆகியோரை இவர்கள் சந்தித்துள்ளனர்.

தமிழ் மக்களுடன் தமது ஒன்றிப்பை தெரிவிக்கவும்–மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு வாழும் மக்களை நேரடியாகக் கண்டு உரையாடி அண்மைக்கால நிகழ்வுகள் பற்றி ஊடகங்கள் வழியாக தாம் கேட்டுக்கொண்டவற்றை உறுதி செய்யவும் –துன்பப்படும் மக்களின் அவலக்குரலுக்கு அமைதியாக செவிசாய்த்து அவர்களுக்காக குரல் கொடுக்கவுமே இவர்கள் விஜயத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கின்றனர். (எ)

## முகமாலைப் பகுதியில் எறிகணைத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தின் முன்னரங்கப் பகுதியாகிய முகமாலை பிரதேசத்தில் இராணுவத்தினருக்கும்–விடுதலைப்புலிகளுக்குமிடையே தொடர்ந்தும் ஆட்லறி மற்றும் எறிகணை மோதல் இடம் பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மூன்று தினங்களாக இப் பகுதியில் மோதல்கள் இடம் பெற்று வருவதாகவும் நேற்று முன்தினமிரவும் நேற்றும் இப் பிரதேசத்தில் எறிகணை மற்றும் ஆட்லறித் தாக்குதல்கள் சத்தம் தொடர்ச்சியாகக் கேட்ட வண்ணம் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோதல் நிலைமை காரணமாக கொடிகாமம் பிரதேசத்தில் இருந்து பொது மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயரத் தொடங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச)

## டெங்கு காய்ச்சல் அபாயம் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நுளம்பு தொல்லை இருந்த போதிலும் டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் இல்லாததால் டெங்கு காய்ச்சல் ஏற்படும் என எவரும் அச்சம் அடையத் தேவை இல்லையென யாழ். மாநகர சபை ஆணையாளர் சரவணபவ தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நகரின் வாய்க்கால்கள், வடிகால்கள் துப்புரவு செய்யப்பட்டு புல்–புதர்கள் அப்புறப்படுத்தப்பட்டு தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகள் எல்லாம் நிரப்பட்டு வருவதால் நுளம்பு பெருக்கம் பெருமளவு குறைந்துள்ளதாகவும் ஆளணி இருந்தாலும் வளங்கள் இல்லாத காரணத்தால் முற்றுமுழுதாக அழிக்கமுடியாது உள்ளதாகவும் இருப்பினும் நுளம்புகளால் டெங்கு காய்ச்சல் அபாயம் யாழ். மா நகர எல்லைக்குள் இல்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (து – 133)

### சமாதானப்...

களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் திஸ்ஸவிதாரண தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தையின் போதே அவ் யோசனைகள் சமர்ப்பிக்கப்படும் என அவர் கூறினார்.

தேசிய தொடர்பில் பல கட்சிகள் பல யோசனைகளை முன்வைத்துள்ளன. இந்த யோசனைகள் அனைத்தையும் கருத்திற் கொண்டு புதிய ஒரு யோசனையை உருவாக்குவதற்கு பிரதிநிதிகள் குழுவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (ச)

### பேச்சுக்கான...

நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப் படவுள்ளது.

நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு இரு தரப்பினரும் ஏற்றுக் கொண்டதும் இம் மாதம் 28,29 ஆம் திகதிகளில் பேச்சுக்கள் நடைபெறும் என்றும் நோர்வேத் தகவல்கள் தெரிவித்தன.

தற்பொழுது திடீரென ஏற்பட்டுள்ள மோதல்களினால் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை குறித்து கூடுதல் கவனம் செலுத்தவேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டதும் எரிக்சொல் ஹெய்ம் மற்றும் பௌயர் இந்தியாவுக்குச் சென்று அங்கிருந்து நோர்வேக்குத் திரும்புவார்கள் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (ச–9)


**யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (வ.து)**

யாழ்.மாவட்டத்தில் மறு அறிவித்தல்வரை ஒரு இறாத்தல் பாண் (450 கிராம் ) ரூபா 28/= க்கே விற்பனை செய்யப்படும்.

நுகர்வோர் பாண் விற்பனை நிலையங்களில் ஒரு இறாத்தல் பாணை 28/= ரூபாவிற்கும் அரை இறாத்தல் பாணை 14/= ரூபாவுக்குமே கொள்வனவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

இவ் நடைமுறையினை பாண் விற்பனையாளர்களும் கவனத்தில் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

64, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

நிர்வாகம்
யாழ்.மா.வெ.உ.கூ.
சங்கம்.

(ட.அ:496)


## குருமன்காட்டில் கிரனைட் வீச்சு

(வவுனியா)

வவுனியா குருமன்காட்டில் பொலிஸ் காவலரண் ஒன்றின் மீது நேற்று கைக் குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் ஒரு காவல்துறை பரிசோதகர் , கான்ஸ்டபிள் ஒருவரும் காயமடைந்துள்ளனர். நேற்றுக் காலை 10.30 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

காயமடைந்த இருவரும் அநுராத புரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அதன் பின் அப் பிரதேசம் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. (ச)

## மூதூர் மேற்கு நோக்கி பீரங்கித் தாக்குதல்

(மூதூர்)

மூதூர் மேற்குப் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளதான உப்பாறு மற்றும் இறால்குழி பகுதிகளை நோக்கி நேற்று பீரங்கித்தாக்குதல்கள் மற்றும் பல் குழல் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

திருகோணமலை கடற்படைத் தளம், கல்லார் படைமுகாம் பகுதிகளில் இருந்து நேற்றுக் காலையில் இருந்தே இத்தகைய தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான சேதவிபரங்கள் எதுவும் இதுவரை அறிவிக்கப்படவில்லை. குறிப்பாக உப்பாறு மற்றும் இறால் குழிப்பகுதிகளில் கடற்புலிகள் புதிதாக பதுங்கு குழிகளையும் முகாம்களையும் அமைத்து வருவதாகவும் இவை திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்ற நிலையிலேயே அடையாளம் காணப்பட்ட பகுதிகளை நோக்கி படைத்தரப்பினர் இத்தகைய தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (ச)



மட்டக்களப்பு பனிச்சங்கேணியில் மீட்கப்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் எனத் தெரிவித்து விடுதலைப்புலிகளினால் நேற்று வெளியிடப்பட்ட படம் இது.

### பனிச்சங்கேணித் தாக்குதலில்...

ரிக்கிலகம பகுதி பனங்கமுவவைச் சேர்ந்தவராவார்.

அவரது வயிறு, முழங்கால் ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டுள்ளது. அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இச் சமரில் 50 மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களில் 15 பேரின் உடல்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கொல்லப்பட்ட இராணுவத்தினரின் உடல்களைப்பெற்றுக்கொள்ள அரசாங்கம் மறுத்து விட்டது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் இராணுவத்தினரது உடல்களை ஒப்படைப்பதாக நாம் தெரிவித்தோம். ஆனால் உடல்களை பெற்றுக்கொள்ள மறுத்து விட்டனர். முறியடிப்புச் சமரில் வீரச்சாவடைந்த ஒரு போராளியின் உடலை ஒப்படைக்கவுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. இந்த முறியடிப்புத் தாக்குதலில் மொத்தம் 11 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

இராணுவத்தினரால் 12 போராளிகளினது வித்துடல்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படுவது உண்மையல்ல. பனிச்சங்கேணி மற்றும் வாகரைப் பகுதியில் இராணுவ எறிகணைத் தாக்குதலில் இரு பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்திடம் இருந்து கைப்பற்றப்பட்ட 100 எறிகணைகளுடன் இரு 81எம்.எம். மோட்டார்கள் ,எறிகணைகளுடன் ஒரு 60 எம்.எம்.மோட்டார், 10 றொக்கட் புறொபெல்ட் கிரனைட் லோஞ்சர்கள், பி.கே.எல்.எம்.ஜிகள், ஏ.கே.எல்.எம்.ஜிகள், ஏ.கே.47 ரக துப்பாக்கிகள்,இராணுவ வாகனங்கள் மற்றும் பெருந்தொகையான ஆயுதங்கள் வாகரையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன என்றார் சி.எழிலன்.

புலிகளால் கைதுசெய்யப்பட்டு சிகிச்சை பெற்று வரும் இராணுவத்தைச் சேர்ந்த கே.எம்.எஸ்.ரட்ணநாயக்க படைநகர்வில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் குறித்து விளக்கியுள்ளதாகவும் இறந்தவர்களின் உடல்களை அவர் அடையாளம் காட்டியுள்ளதாகவும் எழிலன் கூறியுள்ளார். (எ–5)

### மோதல்கள்...

இதேவேளை கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் கூறியதாவது;

கிழக்கில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே மோதல்கள் தொடர்ந்துள்ளன. இவை நிறுத்தப்பட வேண்டும் இல்லையெனில் சமாதானப் பேச்சுக்கள் சீர்குலையும் என எச்சரித்துள்ளார்.

வாகரைப் பிரதேசத்தில் அகதிகள் நிலைமைகள் குறித்து நாம் ஆழ்ந்த கவலை கொள்கிறோம். தொடர்ந்தும் மோதல் நடைபெற்றால் அந்த மக்கள் எங்கே செல்ல முடியும்? தற்போதைய மோதல்களால் அமைதிக்கான முயற்சிகளை இரு தரப்பினரும் கைவிடமாட்டார்கள் என்று நம்புகிறோம் என்றார் அவர்.

இதனிடையே முகமாலை,வாகரை உள்ளிட்ட மோதல் நீடிக்கும் பகுதிகளை கண்காணிப்புக்குழுவினர் கண்காணிக்காமல் போனால் உண்மையிலேயே பாரிய போர் நடவடிக்கைகள் அதிகரிக்கும் என்று விடுதலைப்புலிகள் தரப்பு எச்சரித்துள்ளதாகவும் கூறப்பட்டது. (ச–5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.